பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இனநூலகம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 புரட்டாதி 12 ஞாயிற்றுக்கிழமை (28-9-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 28

## யுவானியார் ஆலயபகுதியில்
# இன்று உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், செப். 28

யாழ். மாவட்டத்தில் கைது செய்யப்பட்டு தகவல் தெரியாதுள்ளவர்களின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் புனித யுவானியார் தேவாலய முன்றலில் அடையாள உண்ணாவிரதம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

கடந்த 19 ஆம் திகதி மூன்று கோரிக்கைகளை முன்வைத்து நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்தது தெரிந்ததே.

வடபகுதியில் கைதுசெய்யப்பட்டு தகவலற்றோர் பாதுகாவலர் சங்கமும் அன்னையர் முன்னணியும் இணைந்து நடத்துகின்ற இந்த உண்ணாவிரதத்தில் அரசியல் கட்சிகள், தொண்டர் அமைப்புக்கள், சங்கங்கள் என்பனவும் கலந்துகொள்ளவுள்ளன.

அதே சமயம் — இன்று யாழ். புனித யுவானியார் தேவாலயத்தில் நடைபெறும் உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவிப்பதாக யாழ். மாவட்ட நீதி, சமாதானக்குழு தெரிவித்துள்ளது.

சமாதானத்துக்காக வேண்டி வெவ்வேறு பங்கு மக்களால் செபவழிபாடுகள் அவ்விடத்தில் காலை 9-00 மணி முதல் நடத்தப்படவுள்ளதாகவும் —

இவற்றில் பங்குபற்றுமாறு அனைத்து கத்தோலிக்க மக்களையும் வேண்டி நிற்பதாகவும் — அக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (இ-5)

### சென்றல் முகாம் சம்பவம்:
# 175 பொலீஸார் திடீர் இடமாற்றம்

மட்டக்களப்பு, செப். 28

கடந்த 23 ஆம் திகதி அம்பாறை சென்றல் முகாம் பகுதியில் உள்ள 4 ஆம் கொலனி குடியேற்றத் திட்டத்தில் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தை அடுத்து சென்றல் முகாம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட 175 பொலீஸார் இட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் இடத்துக்கு அம்பாறை மாவட்டத்தில் ஏனைய பொலீஸ் நிலையங்களைச் சேர்ந்தபொலீஸார் சென்றல் முகாம் பொலீஸ் நிலையத்துக்கு அனுப்பப்பட்டு கடமையைப் பொறுப்பேற்றுள்ளனர்.

கடந்த 23 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில் ஐந்து தமிழர்கள் கொல்லப்பட்டதும் தமிழர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# தற்கொலை குண்டுதாரிகள் திருமலைக்குள் ஊடுருவல்!

## சுற்றிவளைத்து படையினர் தேடுதல்

கொழும்பு, செப்ரெம்பர் 28

திருகோணமலை நகருக்குள் தற்கொலைக் குண்டுதாரிகள் மூவர் ஊடுருவியதாக வெளியான புலனாய்வுத் தகவல் ஒன்றை அடுத்து இராணுவத்தினரும் கடற்படையினரும் பொலீஸாரும் நேற்று கூட்டாகத் தேடுதல் ஒன்றை மேற்கொண்டனர்.

சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகளைக் கொலை செய்வதற்காகவே இவர்கள் திருமலைக்கு அனுப்பப்பட்டதாகவும் —

(8 ஆம் பக்கம் பார்க்க)

### நூட்டுக்குப் பலி

யாழ்ப்பாணம், செப். 28

சுன்னாகத்தில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்ததாக இனந் தெரியாத இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று, சுன்னாகம் பொலீஸாரால் யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச்சடலம்இனம்காணும் பொருட்டு யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-15)

### முச்சந்திமுரளி



அப்ப, சூட்டோடு சூடாக காரியம் நடந்திருக்குப் பாருங்கோ...!

## விறகு ஏற்றுவதற்குச் சென்ற லான்ட்மாஸ்டர் அமுக்கவெடியில்
### மாகியப்பிட்டியில் ஐவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 28

விறகு ஏற்றச் சென்ற லான்ட் மாஸ்டர் அமுக்க வெடியில் சிக்கிய சம்பவம் நேற்று சண்டிலிப்பாய், மாகியப்பிட்டிப் பகுதியில் இடம் பெற்றது.

இந்தச் சம்பவத்தில் லான்ட் மாஸ்டர் சாரதியான அளவெட்டியைச்சேர்ந்த கிருஷ்ணபிள்ளை சத்தியசீலன் (வயது 19) மாகியப்பிட்டியைச் சேர்ந்த இலங்கையர் சதீஸ்வரன் (வயது 19) சின்னராசா மகேஸ்வரன் (வயது 21) உட்பட ஐவர் காயம் அடைந்தனர்.

மேற்குறிப்பிட்டமூவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-15)

## பொலித்தீன் பையில் குண்டு! கண்டியில் இருவர் பலி!!

கொழும்பு, செப். 28

பொலித்தீன் பையில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்து கண்டியில் நேற்று இருவர் கொல்லப்பட்டனர்; ஒருவர் காயமடைந்தார். கண்டியில் தொடங்கொட என்ற இடத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது.

இச்சம்பவத்தை அடுத்து பொலீஸார் அப்பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர். (இ-6)

### சிங்கள ஆணைக்குழு பற்றிய கருத்து
## சமரவீரவுக்கு எதிராக பிக்குகள் போர்க்கோலம்

கொழும்பு, செப். 28

சிங்கள ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பாக அமைச்சர் மங்கள சமரவீரவால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை அவர் உடனடியாக வாபஸ் பெற வேண்டும் என அகில இலங்கை பௌத்த குருமார் சங்கத்தைச் சேர்ந்த புத்தபிக்குமார் கேட்டுள்ளனர்.

அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிப்பதற்கான பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சரால் வெளியிடப்பட்ட கருத்துக்கள் சிங்கள மக்களை அவமதிப்பது போல இருந்ததாகவும்—

48 மணித்தியாலத்தில் புத்தசமயத் துறவிகளிடம் அமைச்சர் மன்னிப்புக் கேட்கத் தவறினால் அவர்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும்—புத்த பிக்குகளின் உயர் மட்டக் குழு அறிக்கை வெளியிட்டுள்ளது.

சிங்கள ஆணைக்குழு பற்றிய பல்வேறு விடயங்கள் தொடர்பாக கடந்த அமைச்சரவை வார இறுதிக் கூட்டத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# மருத்துவபீட விரிவுரையாளர்கள் நேற்றே உடனடியாக நியமனம்
### பல்கலை. நிர்வாகம் விரைந்து நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப். 28

யாழ். மருத்துவ பீடத்தில் நிலவிய போதனாசிரியர் பற்றாக்குறையை ஓரளவு தணிக்கும் வகையில் புதிதாகப் பலருக்கு பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது,

நேற்று துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் கூடிய பல்கலைக்கழக கவுன்ஸில் இது தொடர்பான முடிவை எடுத்தது.

இந்த வெற்றிடங்களை நிரப்பும் படி

(8 ஆம் பக்கம் பார்க்க)

# 100க்கும் அதிக போதனாசிரியர்களும் பல்வேறு துறைகளுக்கு நியமனம்

யாழ்ப்பாணம், செப். 28

யாழ். பல்கலைக்கழகத்தில் நிலவிய போதனாசிரியர் பற்றாக் குறையை நீக்கும் பொருட்டு நூற்றுக்கும் அதிகமான பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

விரிவுரையாளர்களாக, முகாமைத்துவம் (இருவர்), ஆங்கில இலக்கியம் (ஒருவர்), கிறிஸ்தவக் கல்வி (மூவர்), கர்நாடக சங்கீதம் (இருவர்), வயலின் (ஒருவர்), வீணை (ஒருவர்), மிருதங்கம் (ஒருவர்), பரதநாட்டியம் (ஆறுபேர்), பரதநாட்டிய நட்டுவாங்கம் (ஒருவர்), நடன மிருதங்கம் (ஒருவர்), வர்த்தகவியல் (இருவர்), பொருளியல் (இருவர்), சமூகவியல் (இருவர்), அரசறிவியல் (இருவர்), [illegible] (ஒருவர்), [illegible] (ஒருவர்), வரலாறு (ஒருவர்), நுண்கலை

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுனெஸ்கோ உதவியுடன் சுற்றுலா

யாழ்ப்பாணம், செப். 28

யுனெஸ்கோ உதவியுடனான தென்பகுதிக்கான பெண்கள் சுற்றுலாவில் கலந்து கொள்வதற்கு பிரதேச செயலகங்களால் சிபார்சு செய்யப்பட்ட பெயர் விவரங்கள் அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும்—

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை யாழ். செயலகத்தில் நாளை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளதாகவும் – யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தெரிவித்துள்ளார். (இ-5)

## வல்லிபுரக் கோயில் உற்சவ ஏற்பாடுகள்

சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் வருடாந்த மஹோற்சவத்தை யொட்டி வழமைபோல் குடி தண்ணீர் சுகாதாரம், போக்குவரத்து, தொண்டர் சேவைகளை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மஹோற்சவம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற போது இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் பல்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள், ஆலய தர்ம கர்த்தா சபையினர், வட பிராந்திய போக்குவரத்துச் சபைப் பிரதிநிதிகள், வடமராட்சி தனியார் பேருந்து சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சாவகச்சேரியில் ஒருவர் கொலை

தென்மராட்சி, செப். 28

வீட்டில் தனித்திருந்தவர் வெளியே இழுத்து வரப்பட்டு வீதியில் வைத்து வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் மாலை 7 00 மணியளவில் சாவகச்சேரி டச்சு வீதியில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கந்தையா சுப்பிரமணியம் (காந்தி வயது 44) என்பவரே கொலையுண்டவராவார்.

வெட்டுக் காயங்களுடன் வீதியில் காணப்பட்ட இந்த நபரை அயலவர்கள் வாகனம் ஒன்றில் ஏற்றிக் கொண்டு வரும் வேளையில் இடைவழியில் அவர் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி நா. தர்மேந்திரர் விசாரணை நடத்தி சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல உத்தரவிட்டார். (இ-117-15)

## மருத்துவபீட விரிவுரைகள்

யாழ்ப்பாணம், செப். 28

யாழ். மருத்துவ பீடத்தின் 17 ஆம் 18 ஆம் அணிகளுக்கான விரிவுரைகள் ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளதாகவும், 19 ஆம் அணிக்கான விரிவுரைகள் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் ஆரம்பமாகும் என்றும் யாழ். பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

விஞ்ஞான பீடத்துக்கான புதிய மாணவர்கள் ஜனவரி 5 ஆம் திகதி அனுமதிக்கப்பட உள்ளனர் என்றும் — அவர் மேலும் தெரிவித்தார். [இ-5-9]


மீண்டும் யாழ். நகரில்...

நியூ சுபமாலா மோட்டோர்ஸ்

எம்மிடம்

HONDA SUPER CUP LANCER CUSTOM - 50 மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு.

மற்றும் MORRIS OXFORD, MINOR WOLKS WAGEN ஆகிய மோட்டார் கார்களின் உதிரிப்பாகங்கள், ஆட்டோ, L.M.L ஸ்கூட்டர் மற்றும் மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நியூ சுபமாலா மோட்டோர்ஸ்
79, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (50166)


## இறுதிக் கிரியைகள்

அமரர் பொறியியலாளர்

**கந்தையா பேரம்பலம் (பரமானந்தம்)**

(Marshal Candi, பாதுகாப்பு அமைச்சு, சவூதி அரேபியா - காந்தி குடும்பம், கொய்யாத்தோட்டம்)

கடந்த 28-8-97 இல் சவூதியில் அகாலமரணமான க. பேரம்பலத்தின் இறுதிக்கிரியைகள் 28-9-97 இன்று மாலை 4.00 மணியளவில் கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
தி. வசந்தன்
(மருமகன்)

'அருள் நிறை இல்லம்'
புதுவீதி,
கொய்யாத் தோட்டம். (50163)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம்: 07 – 07 – 1944

மறைவு: 29 – 08 – 1997

**S.K மனோகரரூபன்**

(நிர்வாகப் பங்காளர்
மனோகரன்&வெற்றிவேல் நிறுவனம்)

மலர்ந்த முகம் எங்கே?
பாரியென வாழ்ந்தீர்; உங்கள்
புனித முகம் எங்கே?
உங்கள் மனமோ - நீங்கள்
உருவாக்கிய கட்டடங்கள்
போல் உயர்ந்தவை; உறுதியானவை.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் அவரது கொழும்பு தெஹிவளை மெல்போட் கிறசன்ட 12/1, இலக்க வாசஸ்தலத்தில் இன்று 28-09-1997 ஞாயிற்றுக் கிழமை நடைபெறும்.

உங்கள் பிரிவால் துயருறும்
- நண்பர்கள்

யாழ்ப்பாணம். (50161)

## முக்கிய அறிவித்தல்

கோண்டாவில்
பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

**வாக்காளர் இடாப்பு மூடுதல்**

**30-09-1997**

மேற்படி சங்கத்தில் அங்கத்தவர் இடாப்பு 30-09-1997 இல் மூடப்பட்டு வாக்காளர் பட்டியல் தயாரித்து கிளைத் தேர்தல் நடத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. அங்கத்தவர்களைக் கீழ்க்காணும் விடயங்களில் கவனஞ் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

01) சங்க உபவிதிப்படி பங்கு ஒன்றின் பெறுமதி ரூபா 100-00 ஆகும். ரூபா 100-00 பங்குப் பெறுமதி உடையவர்களே வாக்காளர் பட்டியலில் இடம் பெறுவர்.

02) உறுப்பினர் ஒருவர் சங்கத்தின் அங்கத்தவராகச் சேர்ந்து ஓராண்டு முடிந்த பின்பே வாக்களிக்கவோ, நிர்வாக சபையில் இடம் பெறவோ முடியும்.

வ இரத்தினசிங்கம்
தலைவர்

செ. செல்வராசா
செயலாளர்

(C/1649)


வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு ஊசி

வளர்ப்பு நாய்களுக்குரிய நோய்த் தடுப்பு ஊசி மருந்துகளான விசர் (Rabies) முக்கூட்டு ஊசி (D.H.L.) வக்சின்கள் உண்டு.

விவரங்களுக்கு:
R. V. கந்தசாமி
709, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/1652)


## நெஞ்சை விட்டகலா நினைவில்...!

முதலாம் ஆண்டு



அன்னையின் மடியில்: 16 – 09 – 1974

ஆண்டவன் மடியில்: 09 – 10 – 1996

செல்வன்

**இராசதுரை ஜயசிவானந்தன்**

(மாணவன், சித்த மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

10 ஆம் மாதம்



மலர்வு: 16 – 03 – 1932

உதிர்வு: 02 – 12 – 1996

அமரர்

**கிருஷ்ணர் இராசதுரை**

ஆண்டு பல உருண்டோடி மறைந்தாலும்
மலர்ந்த உன் மலர் வதனம் மறக்காதையா
மீட்டும் பிறவிகள் ஏழேழு எடுத்தாலும்
உன்னோடொத்த இளைஞர் முகம் கண்டதும்
வாடுகின்றோம் சோருகின்றோம் தேடுகின்றோம் – உன்னை!
தனி வழி நீ சென்றிடாது அணைத்திட்ட தந்தையையும்
பத்திரமாய் பக்குவமாய் காத்திடடா – நீ

குடும்பத்தினர்

"எச்சாட்டி", சுதுமலை தெற்கு, மானிப்பாய். (47446)


ஞானோதய அக்கடமி
சாவகச்சேரி.

Spoken English
by:
BRITTO
Grammar Classes
Commencing
on 29-09-97 Monday
at 1-30 p. m.
(சி/1651)



A/L 98
பங்குடைமை
ஆசிரியர்:
D. SAM
ஆரம்பம்:- 03-10-97
சனி காலை 10 மணிக்கு
D. M. I.
233, Stanley Road,
Jaffna.
(சி/1648)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தோனேசியாவில்
# தேசிய பேரழிவு நிலை!
## வெளிநாட்டவர் வெளியேற்றம்

ஜகார்த்தா, செப். 28

**காட்டுத் தீ அனர்த்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப் பட்டிருக்கும் இந்தோனேசியாவில் தேசிய பேரழிவு நிலை பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.**

பரவி வரும் புகை மூட்டத்தினால் ஏற்படக் கூடிய உடல் நலப் பாதிப்புக்களில் இருந்து தப்புவதற்காக இந்தோனேசியாவிலும், மலேசியாவின் சில பகுதிகளிலும் இருந்து வெளிநாட்டுப் பிரஜைகள் வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

தென்கிழக்காசியாவில் பிராந்தியக் காட்டுத் தீயினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகள் சிலவும் தமது உல்லாசப் பயணிகளை எச்சரித்துள்ளன. இதனையடுத்து மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகளுக்கான தமது சுற்றுலாவை உல்லாசப் பயணிகள் கைவிட்டுவருவதாக இந்நாடுகளில் உள்ள பயண நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

(ஐ)

### தூசிப் புகை மூட்டம் பரவியதால்
# கணனி, எலக்ரோனிக் நிறுவனங்கள் பாதிப்பு!

கோலாலம்பூர், செப், 28

தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் ஏற்பட்டிருக்கும் காட்டுத்தீயினால் அந் நாடுகளின் பொருளாதார நிலை மோசமாகப் பாதிக்கப்படும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

பெரும் எண்ணிக்கையான தொழிலாளர்கள் நோய்வாய்ப் பட்டுள்ளனர். பல இடங்களில் சூரிய ஒளி கிடைக்காததால் விவசாய நடவடிக்கைகள் பாதிப்படையும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

தரை, மற்றும் கடல் வழிப்போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

கணனி மற்றும் நவீன எலக்ரோணிக் உபகரணங்களைத் தயாரிக்கும் நிறுவனங்களும் அவற்றைப் பயன் படுததும் நிறுவனங்களும் கூட புதிய அச்சுறுத்தல்களைச் சந்தித்துள்ளன.

தூசிப் புகை மண்டலத்தில் இருந்து கணனி உதிரிப்பாகங்களைப் பாதுகாப்பது எப்படி என்று எலக்ரோணிக் தொழில் நிறுவனம் ஒன்று கவலை தெரிவித்துள்ளது.

எலக்ரோணிக் உபகரணங்கள், மருந்துவகைகளைப் பேணிப்பாதுகாக்கும் குளிர்சாதன இயந்திரங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

(ஐ)

### மலாக்கா கடலில்
# இருகப்பல்கள் மோதுண்டன

ஜகார்த்தா, செப். 28

இந்தோனேசியாவுக்கும், மலேசியாவுக்கும் இடைப்பட்ட மலாக்கா கடலில் வர்த்தகக் கப்பல்கள் இரண்டு ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதாக அறிவிக்கப்படுகிறது.

தென்கிழக்காசியப் பிராந்தியத்தை மூடிக் கவிந்துள்ள காட்டுத் தீ புகை மூட்டம் காரணமாக 24 மணிநேரத்துக்குள் இடம்பெற்ற இரண்டாவது விபத்துச் சம்பவம் இதுவாகும்.

கடலில் புகைமண்டலம் திரண்டுள்ளது. இதனால் கப்பல்களை அடையாளம் காண முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

மோதி விபத்துக்குள்ளான கப்பல்களில் இருந்த சுமார் 28 மாலுமிகளை மீட்பதற்காக பெரிய அளவிலான மீட்புப்பணி முடுக்கி விடப்பட்டிருப்பதாக ஜகார்த்தாவில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கப்பல்களுக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் உடனடியாகத் தெரியவரவில்லை.

மோதிய கப்பல்களில் ஒன்று இந்தியாவில் பதிவு செய்யப்பட்டது. மற்றையது பெரு நாட்டைச் சேர்ந்தது.

(ஐ)

## இத்தாலியை பூகம்பம் தாக்கியது

இத்தாலியின் மலைப்பிரதேசக் கிராமங்களில் அடுத்தடுத்துஇருதடவை ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் பெருமளவு சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

குறைந்தது 11 பேர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது வரலாற்றுச் சிறப்பு மிக்க பல கட்டடங்கள் நாசமாகியுள்ளன.

ஆயிரக்கணக்கானோர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். [ஐ]

## சீனா சீற்றம்

பீஜிங், செப். 28

அமெரிக்காவும், ஜப்பானும் இராணுவக் கூட்டுறவு தொடர்பாகக் கைச்சாத்திட்டுள்ள புதிய ஒப்பந்தத்தை சீனா கடுமையாக கண்டித்துள்ளது.

சீனாவில் இருந்து பிரிந்து சென்ற ஒரு பகுதியாக சீனாவால் கருதப்படும் தைவானில் எந்த ஒரு வெளிநாட்டுத் தலையீட்டையும் சீனா ஏற்றுக் கொள்ளாது என்று சீன வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் பீஜிங்கில் தெரிவித்துள்ளார்.

புதிய ஒப்பந்தம் குறித்து ஜப்பானிலும் கண்டனங்கள் எழுந்துள்ளன. (ஐ)

# விமானப் பயணிகளின் சடலங்கள் மீட்பு!

ஜகார்த்தா, செப். 28

சுமாத்திராவின் வடபகுதியில் வீழ்ந்து நொறுங்கிய இந்தோனேசியாவின் ''கருடா'' எயர் லைன்ஸ்ஸின் ''எயார் பஸ்'' விமானத்தின் சிதைவுகளில் இருந்து நூற்றுக்கு மேற்பட்ட சடலங்களை மீட்புப் பணியாளர்கள் மீட்டுள்ளனர்.

சடலங்கள் அடையாளம் காண்பதற்காக மெடான் நகர மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டன.

இந்தோனேசிய விமானத்துறை வரலாற்றில் மிக மோசமான விபத்து எனக் கருதப்படும் இந்த விமான விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்த இந்தோனேசிய அரசு உத்தரவிட்டுள்ளது

மெடான் விமான தளத்தில் தரையிறங்குவதற்காக வந்து கொண்டிருந்த இந்த விமானம் அந்த நகரில் இருந்து 30 கிலோ மீற்றர் தொலைவில் வீழ்ந்து நொறுங்கியது. இந்த விமான விபத்துக்கு அந்த வட்டாரத்தில் பரவியுள்ள காட்டுத் தீ புகை மூட்டமே காரணம் என்று கூறப்படுகிறது.

(ஐ)

# இந்திய வான்பரப்புக்கு உடனடி ஆபத்து இல்லை

புதுடில்லி, செப். 28

இந்தோனேசியத் தீவுகளில் இருந்து பரவும் சாம்பல் துகள் கலந்த புகை மூட்டத்தினால் இந்தியாவின் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் சுற்றுச் சூழல் பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை என்று இந்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

நிக்கோபார் தீவில் வளி மண்டலப் பாதிப்பு எதுவும் அவதானிக்கப்படவில்லை என்று சுற்றுச் சூழல் அவதானிகள் தெரிவித்தனர்.

சுமாத்திராவில் இருந்து எழும் புகை மண்டலம் இந்தியாவுக்குத் தென் கிழக்குப் பக்கமாகவே நகர்ந்து செல்வதாகவும்—

அது தென் மேற்குத் திசையாகத் திரும்புமானால் மட்டுமே இந்திய வான் பரப்பில் பிரவேசிக்கக் கூடும்என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ)

# பங்களாதேஷை புயல் தாக்கியது!

டாக்கா, செப். 28

பங்களாதேஷின் கரையோரப் பகுதியை மணிக்கு 160 கி. மீ. வேகத்தில் கடும் சூறாவளி தாக்கியது. குறைந்தது 20 பேர் வரை உயிரிழந்ததாக முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

ஆயிரக்கணக்கான குடிசை வீடுகள் நாசமாகின, புயலுடன் கூடிய பலத்த மழையால் பல பகுதிகளில் வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டது.

புயலை எதிர்பார்த்து ஏற்கனவே பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டிருந்தனர்.

(ஐ)

# காஷ்மீர் தீவிரவாதிகளிடம் டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள்!
## இந்தியப் படையினர் மீட்டனர்

ஸ்ரீநகர், செப். 28

காஷ்மீர் தீவிரவாதிகளிடம் இருந்து முதன் முறையாக டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களைக் கைப்பற்றி இருப்பதாக இந்தியப் படையினர் அறிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக ஸ்ரீநகரில் எல்லைப் பாதுகாப்புப் படையின் பேச்சாளர் தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் சுமார் ஆயிரம் மீற்றர் தூரம் சென்று டாங்கிகளைத் தாக்கவல்லவை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தியத் துருப்புக்கள் எல்லைக் கிராமம் ஒன்றில் கடந்த மாதம் நடத்திய தேடுதலில் மறைவிடம் ஒன்றில் இருந்து விமான எதிர்ப்புப் பீரங்கியை மீட்டது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

### உலக அரங்கில்

## பிரிட்டன் ஆயுததடை

லண்டன், செப். 28

இந்தோனேசியாவுக்கான பல ஆயுத விற்பனை விண்ணப்பங்களை பிரிட்டன் நிராகரித்துள்ளது.

ரொனி பிளயரின் அரசு இந்தோனேசியாவுக்கான இரு ஆயுத ஒப்பந்தங்களை முடக்கி வைத்திருப்பதாக ''கார்டியன்'' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

## மண்டபம் முகாமில் 18 பேர் கைது

சென்னை, செப். 28

ஈழத் தமிழ் அகதிகள் தங்கியுள்ள மண்டபம் முகாமில் திடீர் சோதனை நடத்திய தமிழகக் காவல் துறையினர் அங்கிருந்து விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 18 பேரைக் கைது செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராமநாதபுரம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட பின் அவர்களில் ஒருவர் தவிர்ந்த ஏனையோர் வேலூர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் கடந்த நான்கு மாதங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் இருந்து தமிழகம் சென்றவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# பணயக் கைதியின் எலும்புக் கூடு மீட்பு?

ஸ்ரீநகர், செப் 28

ஜம்மு காஷ்மீர் பகுதியில் கிராமப் புற மயானம் ஒன்றில் இருந்து அகழ்ந்து எடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடு ஒன்றை தடயவியல் நிபுணர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.

காஷ்மீர் பிரிவினைவாதிகளால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கடத்திச் செல்லப்பட்ட மேற்கு நாட்டு பணயக்கைதிகளில் ஒருவரின் சடலமே அது என்று நம்பப்படுகிறது

பணயக்கைதிகள் நால்வரையும் தீவிரவாதிகள் தடுத்து வைத்திருந்த பகுதியிலேயே இக்கிராமம் அமைந்துள்ளது.

இவர்கள் நால்வரும் கொலை செய்யப்பட்டார்களா என்பதை நிரூபிக்கும் சான்றுகள் எதுவும் முன்னர் கிடைக்கவில்லை.

(ஐ)

# ஹுன் செனின் படையினர் றணரித் பக்கம் தாவினர்

நொம்பென், செப். 28

கம்போடியாவில் அதிகாரத்தில் உள்ள இரண்டாவது பிரதமர் ஹுன் செனின் அரசாங்கத் துருப்புக்களில் 500 பேர் முதலாவது பிரதமர் இளவரசர் நொரடோம் றணரித்துக்கு விசுவாசமான படைகளுடன் இணைந்து விட்டதாகத் தெரி தெரிவிக்கப்படுகிறது

கம்போடியாவின் வடக்கிலும் வடமேற்கிலும் சுமார் 500 அரசாங்கத் துருப்புக்கள் தம்முடன் சேர்ந்து கொண்டதாகவும் —

தற்போது தமது இராணுவ நடவடிக்கை வளர்ச்சி அடைந்து வருவதாகவும் —

ஹுன் சென் சர்வதேச சமூகத்துடன் சமரசம் செய்து கொள்ள முன்வரும் வரை யுத்தம் தொடரும் என்றும் இளவரசர் றணரித் கூறியுள்ளதாக ''ராய்ட்டர்'' செய்தி தெரிவித்துள்ளது.

கம்போடியாவின் முன்னாள் கெரில்லா அமைப்பான கெமரூச் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் றணரித்தின் படைகளுடன் ஏற்கனவே இணைந்திருப்பது தெரிந்ததே.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவராத்திரி விழாவை முன்னிட்டு
# சிறப்பு விற்பனை

**2 - 10 - 97** தொடக்கம்

சகல கலாவல்லிமாலை,
பன்னிரு திருமுறைகளுடன் வெளிவந்துள்ள

## தமிழ் வேதத்திரட்டு

விலை ரூபா **50/-** **115** பக்கங்கள்

**அன்பளிப்பு:**

நவக்கிரக தோத்திரம், கேதாரகௌரி விரதம், உயிர் காக்கும் மந்திரம், கிருஷ்ண கவசம் என்ற 4 நூல்களுடன் சரஸ்வதி படம்.

## அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்

கைதடிச்சந்தி, கைதடி.

[50158]


## பட்டமளிப்பு விழா

**28 09 1997** ஞாயிற்றுக்கிழமை இணுவில் தர்மசாஸ்தா குருகுலத்தில், காயத்திரீபீடத்தால் நடத்தப்படும்

காயத்திரீ ஹோமத்தில்.

சிவஸ்ரீ தானு மகாதேவக் குருக்களால்

சாரதாபீடம் சிவப்பிரம்மஸ்ரீ

### ராம் கெங்காதரக்குருக்களுக்கு
### சிவாகம கிரியா தத்வநிதி

என்னும் சிறப்புப் பட்டம் வழங்கி கௌரவிப் பதையிட்டு நாம் அகமகிழ்ந்து ப ந்து எங்கள் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அல்லையம்பதி

**ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்,**

**யார்க்கரு வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்.**

(50147)


## தீவக பாக்கியம்
### குழந்தைகள் சிகிச்சை நிலையம்

கடந்த 135 ஆண்டுகளுக்கு மேலாக தீவகத்தில் வைத்தியத்துறையில் தமக்கென்று ஓரிடத்தை நிலை நாட்டியவர்கள் மீண்டும் (29 - 09 - 97) திங்கள் தொடக்கம் ஊர்காவற்றுறை நகரில் [Town] வசந்தா பேக்கரி கட்டடத்தில் திங்கள், புதன், வெள்ளி, ஞாயிறு காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 1.00 மணி வரையும் சேவையாற்றவுள்ளனர்.

கிளை: **சர்வோதய கட்டடம் வேலணைத் துறை**

(மேற்குறிப்பிட்ட தினங்களில் பி.ப 2, 00 மணி தொடக்கம் மாலை 4. 00 மணி வரை)

**-நிர்வாகம்**

(50154)


## இதய அஞ்சலி

### அமரர் கு. வி. அமிர்தலிங்கதுரை

(கு. வி. அச்சக உரிமையாளர்)

எமது சக மாணவன்

**செல்வன் அ. பிரதாபனின்**

அன்புத் தந்தையார் கு. வி. அமிர்தலிங்கதுரை இந்தியாவில் காலமானதை அறிந்து வருந்துகின்றோம்.

**நண்பனுக்கு:**

அருமை நண்பனே!
மலையசைந்தாலும் – நீ
கொண்ட உறுதியில் அசையாதவனே!
இதை எப்படி தாங்கிக் கொள்வாய்?
நண்பா,
கலங்காதே.
ஆயிரம் கைகளுடன்
உனை அணைக்க
தந்தையாய் நாங்களிங்கு.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும், அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் நண்பனின் குடும்பத்தினருக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயரில் பங்கெடுக்கும்:

**98 ஆம் ஆண்டு வர்த்தகப்பிரிவு மாணவர்கள், யாழ். இந்துக் கல்லூரி.**

(50155)

## சமய சந்நிதியில்

புலோலி பசுபதீஸ்வரர் ஆலயத்தில் எதிர்வரும் 4ஆம் திகதி மக்களின் நல்வாழ்வு வேண்டி நவக்கிரக சாந்தி ஹோம பூஜை நடைபெறவுள்ளது. (ஐ-173)

★ ★ ★

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்த திருவிழா கடந்த வெள்ளியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை நற்கருணை வழிபாடு நடைபெறும். மறுநாள் காலை 7 மணிக்கு யாழ். ஆயர் மகா வந். தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளால் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். (ஐ-30)

## கொக்குவில் லயன்ஸ் கழகம்

யாழ்ப்பாணம், செப். 28

மானிப்பாய் கோயில்பற்று லயன்ஸ் கழகத்தினரால் கொக்குவில் பிரிவுக்கென புதிதாக ஒரு லயன்ஸ் கழகம் எதிர் வரும் 12 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப் படவுள்ளது.

இது தொடர்பான அங்கத்தவர்களின் விளக்கக் கூட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

(ஐ-9)

## வெள்ளி விழா

வடமராட்சி, செப். 28

அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி ஆசிரியை அருட் சகோதரி மரியமலர் யோசவின் துறவற வாழ்வின் வெள்ளிவிழா அடுத்த மாதம் 7 ஆம் திகதி அச்சுவேலி பரிலங்காமாதா மடத்தில் கொண்டாடப்படவுள்ளது. (ஐ-173)

## சிறுவர் பூங்கா மெய்வன்மை போட்டி

கரணவாய் வடக்கு நாச்சிமார் கோயிலடி ஸ்ரீ அம்பாள் சனசமூக நிலையத்தின் அறவழி மழலைகள் கல்விப்பூங்கா மெய்வன்மைப் போட்டி எதிர் வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் சிறப்பு விருந்தினராக அறவழிப் போராட்டக்குழுத் தலைவர் வி. ஜி. தங்கவேல் கலந்து கொள்வார்.

(ஐ-173)

## விளையாட்டுத்துறை விருதுகள் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 28

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு வீரர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 1.30 மணி முதல் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

மெய்வன்மை, பாட்மின்டன், கூடைப்பந்தாட்டம், கரம், சதுரங்கம், ஹொக்கி, டேபிள் டென்னிஸ், தாச்சி ஆகிய விளையாட்டுக்களில் ஆண், பெண் இரு பிரிவுகளிலும்—

கிரிக்கெட், ஜிம்னாஸ்டிக், கராட்டி, வலைப்பந்தாட்டம், டென்னிஸ், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்களிலும்—

முதன்மை இடம்பெற்ற பல்கலைக்கழக வீரர்கள் இந்த நிகழ்ச்சியின் போது விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்படுவர். (உ)

# கைத்தொழில் பாதிப்பு; விவரங்கள் சேகரிப்பு!

யாழ். மாவட்டத்தில் பாதிப்படைந்துள்ள கைத்தொழில் முயற்சிகள் தொடர்பான மதிப்பீடு பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக கிராம அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த மதிப்பீட்டை யாழ். செயலக புள்ளிவிவரக் கிளை நடைமுறைப்படுத்துகிறது.

பாதிப்படைந்துள்ள கைத்தொழில்நிறுவனங்களினதும், தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் கைத்தொழில் நிறுவனங்களினதும் விவரங்கள் மதிப்பிடப்படுகின்றன.

விவரங்கள் திரட்டப்பட்டதும் ஐ.நா. அகதிகள் தூதரகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் தொழில் முயற்சிகளை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படவுமுளது. (ஐ-86)

## நன்றியைத் தெரிவிக்கின்றோம்

சுழிபுரம் - பறாளையில் வாழ்ந்து வந்த

### ஸ்ரீமதி கமலாம்பாள்
### சண்முகரத்தின சர்மா ஐயாவின்

பாரியார் 19-7-97 இல் சிலாபம் – முன்னேஸ்வரத்தில் வாழும் மகன் ஜெயந்திநாத சுப்பிரமணிய சர்மாவின் இல்லத்தில் முருகன் திருவடியைச் சேர்ந்த செய்தியை அறிந்து எமக்கு ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்த யாவருக்கும், கண்ணீர் அஞ்சலியை சுழிபுரத்தில் வெளியிட்டுப் பரப்பிய பஜனைச் சபையாருக்கும், கடிதம், தொலைபேசிகள் மூலம் துக்கத்தைப் பகிர்ந்துகொண்ட அன்புள்ளங்களுக்கும், கொழும்பில் இருந்து முன்னேஸ்வரம் வந்து மரண வைபவத்திலும், கிரியைகளிலும் கலந்து அஞ்சலி செய்த உறவினர், பெரியோர் யாவருக்கும் எமது மாறாத நன்றி வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரம்மஸ்ரீ சு சண்முகரத்தின சர்மா
(கணவன்)

மக்களும், மருமக்களும்,
முன்னேஸ்வரம்.

பறாளை,
சுழிபுரம்.

(50157)

## அறிவித்தல்

### இந்து மதகுருமார் ஒன்றியம் யாழ்ப்பாணம்.

கடந்த **23 - 08 - 97** இல் நடைபெற்ற இந்துமத குருமார் ஒன்றிய நிர்வாக சபைக் கூட்டத்தில் பின் வருவோர் வித்துவசபை சிரேஷ்டர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டு செயற்பட்டு வருகின்றார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

I. பேராசிரியர் - கலாநிதி
**பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ணஐயர்**
(தலைவர், இந்துநாகரிகத்துறை யாழ். பல்கலைக்கழகம்)

II. மஹாராஜஸ்ரீ து. ஷண்முகநாதக் குருக்கள்
(ஆதீனகர்த்தா, மாவிட்டபுரம்)

III. **சிவஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள்**
(அதிபர், தர்மசாஸ்தா காயத்ரீபீடம் இணுவில்)

IV. **சிவஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள்**
(கந்தசாமி கோயில் பிரதமகுரு, நீர்வேலி)

V. **சிவஸ்ரீ மு. பரமசாமிக்குருக்கள்**
(வடகோவை)

VI, **சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள்**
(திருக்கணித பஞ்சாங்க ஆசிரியர், மட்டுவில்)

ஷை வேதாந்த ஆகம சம்பந்தமான ஐயப்பாடுகள் ஏற்படும் பட்சத்தில் அவற்றின் முடிவுகளை தெரிவிப்பதற்காக கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். குருமார்களின் அத்தியாவசிய நடைமுறைகளை நலன் கருதி ஒழுங்குபடுத்துவதற்கு மேற்கொண்டு இந்துமத குருமார் ஒன்றியத்தின் விசாரணைக்குழு ஒன்றும் செயற்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம்.

நன்றி!

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**தலைமைச் செயலகம்,**
இந்துமத குருமார் ஒன்றியம்,
இல: 74, பிறவுண் றோட்,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

**பிரம்மஸ்ரீ கா. சந்திரசேகரசர்மா,**
செயலாளர்.

(50160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஒக்ரோபரில் புதிய சம்பளம்!

அச்சுவேலி, செப். 28

பட்டதாரி ஆசிரியர்களின் சம்பளம் புள்ளித்திட்ட அடிப்படையில் மாற்றி அமைக்கப்பட்டு வழங்கப்படவுள்ளது.

சம்பளத்திட்டத்தை மாற்றி அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகள் கோட்டக் கல்வி அலுவலகங்களில் நடைபெற்று வருகின்றன.

பட்டதாரி ஆசிரியர்களின் சேவைக்காலம், கல்வித் தகைமை, தொழில்சார் கல்வித்தகைமை என்பவற்றின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டு 1994 ஒக்ரோபர் 6 ஆம் திகதி அன்று உள்ளபடிகிடைக்கின்ற புள்ளிகளின் அடிப்படையில் ii ஆசிரியர் சேவையில் உள்வாங்கப் படவுள்ளனர்.

புள்ளி அடிப்படையிலான உள் வாங்கல் அடிப்படையில் ஆசிரியர் சேவை வகைப்பாட்டிற்கு ஏற்ப சம்பளம் கணிப்பீடு செய்யப்பட்டு 1997ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்து வருடாந்த சம்பள அதிகரிப்புடன் கூடிய சம்பளம் வழங்கப்படவுள்ளது.

1994 இல் இருந்து 1997 வரையான காலப்பகுதிக்கு சம்பள நிலுவை வழங்கப்படமாட்டாது என அறியப்படுகின்றது.

புதிய சம்பளத்தை ஒக்ரோபர் மாதச் சம்பளத்துடன் வழங்க ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

(ஐ-11)

## பாலர் விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், செப். 28

மூளாய் மாதர் சங்கத்தால் நடத்தப்படும் பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிறு பிற்பகல் 2 மணி முதல் மூளாய் பிள்ளையார் கோயில் முன்றலில் திருமதிசெ. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும். சங்கானை பிரதேச செயலர் கா. சந்திரராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ)

## படுக்கைகள் கிடைக்கவில்லை

1996 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் கொழும்பு சமூக சேவைகள் திணைக்களத்தால் கைதடியில் உள்ள அரசாங்க முதியோர் இல்லத்திற்கு அனுப்பப்பட்ட நூறு படுக்கைகள் இதுவரை இங்கு வந்து சேரவில்லை.

கொழும்பு சமூகசேவைகள் திணைக்களம் யாழ். அரசாங்க அதிபருக்கு இவற்றை அனுப்பியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-111)

## ஊழியருக்கு இலவச சீருடை

சாவகச்சேரி நகரசபை தனது சபையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு சீருடைக்கான துணிவகைகளை இலவசமாக வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

(ஐ-32)

### வல்லிபுரக் கோயில் பகுதியில்

## ஆயிரம் பனம் விதைகள் நடும் திட்டம் ஆரம்பம்

வடமராட்சி, செப். 28

இவ்வாண்டுக்கான பனை நடுகைத் திட்டத்தின் கீழ் வடமராட்சியில் வல்லிபுரக் கோயில் சுற்றாடலில் ஆயிரம் பனம் விதைகள் நடும் திட்டம் கடந்த வியாழனன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கை பனை அபிவிருத்திச் சபையினால் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்ட இத்திட்ட அங்குரார்ப்பண வைபவம் பனை அபிவிருத்திச் சபையின விரிவாக்க உத்தியோகத்தர் வி. ஜி. தங்கவேல் தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பி. வி. கிருஷ்ணசாமி, வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை பிரதேசச் செயலர் ஆ. சிவசுவாமி சபையின் பொது முகாமையாளர் கே. கோகுலதாஸ் உட்பட பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

இச்சுற்றாடலில் மேலும் பனம் விதைகளை நடத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஐ-173)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 28

அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபையின் வெள்ளிவிழா தொடர்பான கலந்துரையாடல் வல்வெட்டிவேவில் பிள்ளையார் ஆலயத்தில் இன்று ஞாயிறு முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறவுள்ளது. (ஐ)

## மட்டுவில் வடக்கில் மாட்டு வண்டிச் சவாரி!

சாவகச்சேரி, செப். 28

மட்டுவில் வடக்கு சத்துரங்கிராய் திடலில் கடந்த ஞாயிறு பிற்பகல் மாட்டுவண்டிச் சவாரி இடம்பெற்றது. மட்டுவில் அம்பாள் சனசமூக நிலைய அனுசரணையுடன் நடைபெற்ற இப் போட்டியைக் காண பெருந் திரளான மக்கள் திடலில் கூடினர். மொத்தம் மூன்று பிரிவுகளாக சவாரி வண்டில்கள் தரம் பிரிக்கப்பட்டு போட்டி நடத்தப்பட்டது.

'ஏ' பிரிவில்-: வட்டுக்கோட்டை—ம. ரஞ்சன் என்பவரது காளைகள் முதலாம் இடத்தையும்—

'பி' பிரிவில்:- மட்டுவில், ஆர். குணம் என்பவரது காளைகள் முதலாம் இடத்தினையும் —

'சி' பிரிவில்:- அளவெட்டி—எஸ். மகேந்திரம் என்பவரது காளைகள் முதலாம் இடத்தினையும் பெற்று பரிசில்களைத் தட்டிக் கொண்டன. (ஐ-31)

## வைத்திய சேவையை தொண்டாக கருதியவர் டாக்டர் சம்பந்தர்

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பது, அறுபது, எழுபதுகளில் வைத்திய கலாநிதி நா. தி. சம்பந்தரின் வைத்திய சேவை வடமாகாணத்திலும், குறிப்பாக யாழ். மாவட்டத்திலும் மிகவும் பிரசித்தமாயிருந்தது. அவர் நாமமே மக்கள் மத்தியில் மகிமை பெற்றிருந்தது. இப்பொழுதும் அவர் பெயரில் சில வைத்திய நிலையங்களும் ஆலோசனைக் கூடங்களும் பலரால் நடத்தப்பட்டு வருகின்றன.

வைத்திய கலாநிதி சம்பந்தர் தன் சேவையை உன்னத இலட்சியமாகக் கொண்டு பொறுமை, இரக்கம், புனித மனப்பான்மையுடன் தெய்வத் தொண்டாகப் போற்றிப் பணிபுரிந்தவர். மக்கள் இதயக்கமலத்தில், வானுறையும் தெய்வமாக, தன் கடன் பணி செய்து கிடப்பதே பிறவியால் ஆன பயனென ஊருக்கு உழைத்த உத்தமர். அவரது முகபாவமே தன்னலமற்ற சேவையுணர்வை வெளிப்படுத்தும். நோயாளியின் உளவியல் நிலையைக் கணிப்பிட்டு, அதற்கேற்ப அணுகி, நோயாளியின் உற்சாகத்தையும் நம்பிக்கையையும் முறைப்படுத்துவது அவரின் சிகிச்சைச் செயல் திறனின் ஓர் அம்சமாகும்.

1946 ஆம் ஆண்டு சத்திர சிகிச்சை நிபுணராக (F.R.C.S.) சித்தியடைந்தவராயினும் பல்துறை வைத்திய நிபுணராகக் கடமையாற்றி மக்களின் பேரன்பையும் பெருமதிப்பையும் பெற்று விளங்கிய அமரர் ஒரு தர்மயோகி ஆவார்.

அவர் தமது வாழ்வின் இறுதி பதினேழு வருடங்களும் கண்ணில் குளுகோமா என்ற குணப்படுத்த முடியாத வியாதியால் பாதிக்கப்பட்டு ஓர் இருண்ட உலகில் வாழ்ந்த போதும் அவருடைய இயல்பான குணங்களாகிய மலர்ந்த முகமும், இனிய சுபாவமும் அவரை விட்டகலவில்லை.

சிறந்த மதிநுட்பமும் நுண்ணறிவும் மிக்க டாக்டர் சம்பந்தர் மலேசியாவில் 1916 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை அங்கு பெற்று உயர் கல்வியை இலங்கையில் பெற்று பேராதனை பல்கலைக்கழகம் புகுந்து வைத்திய இறுதிப் பரீட்சையில் (M. B. B. S.) முதன்மை நிலையில் உயர்சித்தி பெற்றார். இலங்கை வைத்தியக் கல்வி சரித்திரத்தில் முதலாவது எம். பி. பி. எஸ் சான்றிதழ் பெற்ற மாணவர் அவராவார். ஒரு வருடம் அரசாங்கத்துறையில் சேவையாற்றினார். பின்பு 1944 ஆம் வருடம் பெற்ற தாயும்

> **நீத்தார் நயப்புரை**

பிறந்த பொன்னாடும் சிறந்ததாகக் கருதிய டாக்டர் தனது மூதாதையினரின் ஊரான காரைநகருக்கு அண்மையிலுள்ள மூளாய் கிராமத்தில் மிகச் சிறிய கட்டமைப்பிலுள்ள கூட்டுறவு வைத்தியசாலையில் குறைந்த வேதனத்தில் வைத்தியராகச் சேர்ந்தார். பின்பு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையை ஒரு வைத்திய ஆலயமாக்கிய பெருமை அண்ணல் சம்பந்தரையே சாரும்.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் முப்பது வருடம் கடமைபுரிந்த சம்பந்தர் ஒரு கிராமிய வைத்தியசாலையைப் படிப்படியாக வளர்த்து அறுவைச் சிகிச்சைப் பிரிவு, அத்தியாவசியப் சேவைப் பிரிவு, மகப்பேற்றுபிரிவு என்பவற்றை உருவாக்கி இலங்கையில் மட்டுமல்லாது தென் கிழக்காசியாவிலே நலிந்த மக்களுக்கு குறைந்த செலவில் நிறைந்த பயனைப் பெறும் கூட்டுறவு வைத்திய சாலையாக பிரகாசிக்கச் செய்தார்.

இவ்வைத்தியசாலையில் 120 உள்நோயாளர்களை வைத்து பராமரிக்கக் கூடிய வசதிகளிருந்தன. இங்கு ஒரு நோயாளி குடும்பத்துடன் சென்று தங்கி நோய் தீர்ந்த பின் ஆரோக்கியத்துடன் வீடு திரும்ப முடிந்தது. ஆஸ்பத்திரியை வீடாகவும் உபயோகிக்கும் ஒப்பற்ற வசதி அன்று மக்களுக்கு இருந்ததால் சம்பந்தர் மக்களோடு இறுகிய சம்பந்தம் கொண்ட மக்கள் மகனானார். அக்காலத்தில் பருத்தித்துறை முதலிய இடங்களிலிருந்து மூளாய் வைத்தியசாலைக்கு நாளாந்தம் இ. போ. ச. பிரத்தியேக பேருந்து சேவை நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

சம்பந்தருடைய சிகிச்சைத் திறனையும் தலைமைத்துவப் பண்புகளையும் இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் மூலமறிந்த அமெரிக்கர் அன்னாருக்கு அமெரிக்கா வைத்திய நிறுவனங்களில் பயிற்சி பெறுவதற்குப் புலமைப் பரிசு 1960 ஆம் ஆண்டு வழங்கி கௌரவித்தது

அமரர் சம்பந்தர்பால் மக்கள் செல்வாக்கைக் கணித்து தென்பகுதி அரசியற் கட்சிகள் உட்பட பல அரசியற் கட்சிகள் அன்னாருக்கு உயர் பதவிகள் வழங்குவதற்கு முன் வந்தன. அவற்றை அவர் ஏற்க மறுத்தது பட்டம் பதவிகளுக்கு ஆசைப்படவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டியுள்ளது.

புலம்பெயர்ந்து பல வசதிகளோடு வசிக்க சிறந்த சந்தர்ப்பமிருந்தும் இறுதிவரை தான் இந்த மண்ணில் வசிக்க வேண்டுமென்று திருநெல்வேலியில் அடிப்படை வசதி கிடையாத சூழ்நிலையிலும் வசித்து வந்தார். அவருடைய சக்திக்கு அப்பாற்பட்ட நிலையில், 1995 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் திருநெல்வேலியை விட்டு வெளியேறி பல கஷ்டங்கள் மத்தியில் 1996 ஆம் ஆண்டு தைமாதம் கொழும்பு சென்றடைந்தார். அங்கு அதே வருடம் ஒகஸ்ட் மாதம் இரண்டாம் தேதி அமரரானார்.

டாக்டர் சம்பந்தரின் சேவையைப் பாராட்டுவது அன்னாருக்குச் செலுத்தும் நன்றிக்கடன் மட்டுமல்லாது, இன்றைய சமுதாயத்திலிருப்போர் சேவையில் சிறக்க உற்சாகமளிக்கும் [illegible] ★

— நா. குகராசா

## ஆஸ்பத்திரிஅமையஊழியருக்கு விரைவில் நிரந்தர நியமனம்?

வடமராட்சி, செப். 28

யாழ்.மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றிவரும் அமைய தொழிலாளர்கள் விரைவில் நிரந்தரமாக்கப்படவுள்ளனர்.

இதற்கென யாழ். பிராந்திய சுகாதாரத்திணைக்களம் அமைய தொழிலாளர்களின் விவரங்களை மாவட்டத்திலுள்ள சகல அரசினர் வைத்தியசாலைகளிடமும் கோரியுள்ளது.

தற்போது கடமையாற்றிக் கொண்டிருக்கும் அமைய தொழிலாளர்களின் கல்வி, பிறப்புச் சான்றிதழ்கள், அவர்கள் வருடத்தில் வேலை செய்த நாள்களின் எண்ணிக்கை போன்ற விவரங்களே சேகரிக்கப்படவுள்ளன. (ஐ-173)

## சந்நிதி விசேட பஸ்சேவை மூலம் ரூ.1 லட்சத்து 25 ஆயிரம் லாபம்

வடமராட்சி, செப். 27

தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோயில் வருடாந்த சப்பற, தேர், தீர்த்த உற்சவங்களை ஒட்டி நடத்தப்பட்ட விசேட பஸ் சேவை மூலம் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ ஒருலட்சத்து 25 ஆயிரம் ரூபாவை வருமானமாகப் பெற்றுள்ளது.

இவ்விசேட பஸ் சேவைக்கென பருத்தித்துறை டிப்போ 9 பஸ் வண்டிகளை மட்டுமே பயன்படுத்தியது.

சந்நிதி உற்சவத்தையொட்டி யாழ்ப்பாண டிப்போவும் இதற்கெனத் தான் தனியாக விசேட பஸ் சேவையை நடத்தி கணிசமான தொகையை வருமானமாகப் பெற்றுள்ளது.

பக்தர்களின் வசதி கருதி பருத்தித்துறை டிப்போவுக்கு உதவியாக சந்நிதிகோயில் உற்சவத்துக்கென விசேட பஸ் சேவையை நடத்தி உதவியமைக்கு பருத்தித்துறை டிப்போ நிர்வாகிகள் யாழ்ப்பாண டிப்போ நிர்வாகத்துக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

(ஐ-173)

### பளைப்பகுதி அரச தோட்டங்களில்

## கூறுவிலை கோரி தேங்காய் விற்பனை!

தென்மராட்சி, செப். 28

பளைப் பகுதி அரசாங்க தென்னந்தோட்டங்களில் பறிக்கப்படும் தேங்காய்கள் கூறுவிலைகள் மூலம் பொது மக்களுக்கு வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு மாதமும் முதலாந் திகதி முற்பகல் 11.00 மணிக்கு கேள்விக் கூறுவிலைகள் பளை மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை அலுவலகத்தில் சபை உத்தியோகத்தர்களால் பரிசீலனை செய்யப்படுமெனவும், மாதத்தின் முதலாந் திகதி பொதுவிடுமுறை தினமாக இருப்பின் அடுத்த வேலை நாள் தொடக்கத்தில் கூறுவிலைப் பட்டியல்கள் பரிசீலனை செய்யப்படுமெனவும் பளை மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை நிர்வாக அலுவலர் சு. தவரத்தினசிங்கம் அறிவித்துள்ளார்.

தேங்காய்களை கூறு விலை கோருவதன் மூலம் பொதுமக்களுக்கு விநியோகிக்கும் நடைமுறை கடந்த சுமார் 7 ஆண்டு காலப்பகுதிக்கு முன் நடைமுறையில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

(ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட புதிய (HERO HONDA - 100 Delux) மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- தி. தங்கராசா (பழம்) தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை.
[50142]

நல்லின ஜேசி பால் மாடுகள் இரண்டு விற்பனைக்கு உண்டு. (அண்மையில் கன்று ஈன்றவை) மற்றும் 7 மாச ஜமுனாபாரி கடாவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 14, குறோசற் ஒழுங்கை, கச்சேரி - நல்லூர் றோட்.
[50086]

இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். தொடர்பு:- Lucky Farm Sales Cantre Palaly Road, Thirunelvely.
[50151]

புறோயிலர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 17, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [கோயில் வீதி - ஆஸ்பத்திரி வீதி சந்திக்கு அருகில்.]
[50150]

இறைச்சிக் கோழி புறோயிலர் (Broiler) விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
[50131]

இல. 21/3, புது வீதி, கொய்யாத்தோட்டம், பாசையூரில் வீட்டுடன் 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி பிரான்சிஸ், 7, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
[50122]

சாவகச்சேரி கண்டி வீதி அரசினர் வைத்தியசாலைக்கு அண்மையில் சண்முகம் வீதியில் உள்ள காணி 1½ பரப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: M. வைரவநாதன், 75, மானிப்பாய் வீதி, ஈழநாடு அண்மையில், யாழ்ப்பாணம்.
[50096]

## தவறிவிட்டது

வசாவிளான் மேற்கு, தெல்லிப்பழை பொன்னன் செல்வராசா ஆகிய எனது விசேட அடையாள அட்டையும் (0907017648) தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த ரசீதும் சாவகச்சேரிக்கும் நுணாவிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வைரவர் கோயிலடி, கைதடி - நுணாவில் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.
[50144]

## நாடகவிழா

மானிப்பாய், செப். 28 மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் அடுத்த மாதம் 4 ஆம் திகதி நாடக விழா நடைபெறவுள்ளது. (ஐ-90)

**A | L**
**DAY CLASS**
கிரயக் கணக்கீடு
**Mr. BALA**

**ENGLISH**
(SPOKEN)
**Mr. Ra. Rajesh**
**B. A.**
**SHAMROCK**
(50146)


# யாழ். லயன்ஸ் கழகம்

## இலவச ஆங்கில வகுப்பு

வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள மாணவர்களுக்காக மேற்படி வகுப்புக்கள் நல்லூர் விஞ்ஞானக் கல்விக் கழகத்தில் **04-10-1997** பி. ப. **2.30** மணிக்கு ஆரம்பமாகும். மேலதிக விவரங்களுக்கு விஞ்ஞானக் கல்வி நிலையப் பதிவாளருடன் தொடர்பு கொள்ளவும்.

(50135) தலைவர்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 22 — 11 — 1929

மறைவு: 28 — 08 — 1997

## அமரர் ஆறுமுகம் கிருஷ்ணராஜா
(இளைப்பாறிய பொலீஸ் இன்ஸ்பெக்டர்)

அன்னாரின் மரணக் கிரியைகளில் பங்கு பற்றியவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் இல்லத்தில் **28. 09. 97** ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்விலும் பங்குபற்றி, மதியபோசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

– குடும்பத்தினர்

''பார்பதி வாசம்'',
நெல்லண்டை, பருத்தித்துறை (சி/1646)

# அந்தியேட்டி அழைப்பு



## திருமதி அன்னலட்சுமி வேலாயுதம்
[பாக்கியம்]

அன்னை மடியில்: **03 - 11 - 1918**

ஆண்டவன் அடியில்: **04 - 08 - 1997**

சிறுவயதில் தந்தையை இழந்த எங்களை ஒரு குறையும் விடாது வளர்த்த எங்கள் அம்மாவே! எங்களுக்கு தாயும், தந்தையுமாக விளங்கிய அன்னையே! உங்கள் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவரையும் தவிக்கவிட்டுச் சென்றது எங்கே?

எங்கள் கண்ணீர்ப் பூக்களை உங்கள்
பாதமலருக்கு அர்ப்பணிக்கின்றோம்.

இன்று [28 – 09 – 1997] எமது இல்லத்தில் நடைபெறும். அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்:
**Dr.** சி. சிவபாலன்.
டாக்டர் சு[illegible]
பருத்திக் [illegible]
சுன்னாகம். [50127]

# பொதுக் கூட்டம்

## மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

பதிவுஇல:. V. V. J / Vali North - 04

காலம்: 30-09-1997 செவ்வாய்

நேரம்: காலை 9 மணி

இடம்: மயிலிட்டி காங்கேசன்துறை முகாம், வியாபாரிமூலை.

மயிலிட்டி கடற்றொழிலாளர்கள் தவறாது சமுகம் தரவும்.

வியாபாரிமூலை, செயலாளர்
(சி - 1643)

# தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

## சங்கப் பொதுச்சபை பிரதிநிதிகளுக்கு வருடாந்தப் பொதுக்கூட்ட அறிவித்தல்

காலம்: **1997-10-19** ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் **10** மணி (புதிய நேரம்)

இடம்: சங்கத்தலைமைக் காரியாலயம், துர்க்காபுரம், தெல்லிப்பழை, மல்லாகம்.

1. சங்க உபவிதி 43-க்கு அமைவாக மேற்படி வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பிரேரணை சமர்ப்பிக்க விரும்பும் பொதுச்சபை உறுப்பினர்கள் 1997-10.-05 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கலாம். அதற்குப் பின்னர் கிடைக்கும் பிரேரணைகள் நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டா.
2. 1991 - 12 - 31 ஆம் திகதி வரையான சங்க நிதிநிலைக்கூற்று ஆய்வு அறிக்கை குறித்த கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும். குறித்த அறிக்கையைப் பார்வையிட விரும்பும் பொதுச்சபைப் பிரதிநிதிகள் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் வேலை நாள்களில் முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி (புதிய நேரம்) வரை பார்வையிடலாம்.
3. குறித்த அறிவித்தல் பொதுச் சபைப் பிரதிநிதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கிடைக்கப் பெறாதவர்கள் சங்க தலைமைக் காரியாலயத்தில் சங்கச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சி. சிவமகாராசா
தலைவர்

சி. முருகையா
செயலாளர்

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
துர்க்காபுரம், தெல்லிப்பழை, மல்லாகம்.
1997-09-23 (சி/1642)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 27 — 02 — 1983

ஆண்டவன் அடியில்: 10 — 10 — 1996

## செல்வன் பிரதீபன் இராசேந்திரம் (தீபன்)
திதி: 28 - 09 - 97

அன்புச் செல்லம் தீபனே!
எமதுயிர் எம்மை விட்டுப் பிரிந்து
ஒருவருடமா? நம்ப முடியவில்லையே?
தீபனே! வன்னி செல்லத்தானே நாம்
உன்னை அனுமதித்தோம்.
விண்ணுலகம் செல்ல யார் உன்னை அனுமதித்தார்?
பாசமுடன் வருவாய் என பாவி நாம்
பார்த்திருந்தோம்?
மோசம் செய்த காலன் உனை
மாயமாய் கவர்ந்து விட்டான்.

உன்பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணா,
தங்கை, அம்மம்மா,
பெரியப்பா, பெரியம்மா,
மாமா, அத்தான்மார்,
மற்றும் உற்றார், உறவினர்கள்.

அல்லிப்பளை,
பளை. [50153]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# வேலையற்ற பட்டதாரிகள் பிரச்சினைக்குத் தீர்வு

## சந்திப்பின் போது அரச அதிபர் உறுதி

யாழ்ப்பாணம், செப். 28

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கவனத்துக்குக் கொண்டுவரப்படவுள்ளதாகவும் —

விரைவில் நியமனம் வழங்க நடவடிக்கை எடுத்துவருவதாகவும் — யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தமக்கு தெரிவித்ததாக யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை யாழ். செயலகத்தில் யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகள் அரச அதிபரை சந்தித்தனர்.

அப்போது அரச அதிபர் இத்தகவலைத் தெரிவித்திருந்தார் என்றும் —

அரச அதிபரின் முனைப்பான நடவடிக்கைக்கு மதிப்பளித்து, வேலையற்ற பட்டதாரிகள் யாழ். செயலகத்தில் நடத்தவிருந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஒத்திவைக்கவும், நிலைமைக்கேற்ப செயற்படவும் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் விரைவில் கூடவுள்ளது என்றும் — அதில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-5)

## தூதுவரின் புத்திமதி

இனப் பிரச்சினைக்கான அரசின் தீர்வுப் பொதி— அதிகாரப் பரவல் சட்ட வரைபு— அனேகமாக அடுத்த மாத நடுப்பகுதியில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று பெரிதும் நம்பப்படுகிறது; எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கு இணைப்பு, அதிகாரப் பரவல் அலகு, காணி அதிகாரம், மாகாணப் பொலீஸ் உட்பட்ட முக்கிய விடயங்கள் குறித்து நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தீர்க்கமான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் மத்தியில் கருத்திணக்கம் காணப்படவில்லை.

எனினும் தீர்வுப் பொதியை சட்ட வரைபாகச் சமர்ப்பிப்பதில் அரசு அக்கறையாக உள்ளது. தெற்கில் மட்டுமன்றி வடக்கு, கிழக்கிலும் அதிகாரப் பரவல் திட்டம் குறித்து அரசு விளக்கக் கூட்டங்களை மக்களுக்கு நடத்தி வருகிறது.

இத்தகைய ஒரு பின்னணியில்—

கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதுவர் டேவிற் ரட்தாம் தெரிவித்துள்ள கருத்து சகல தரப்பினராலும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இலங்கை நாடாளுமன்றத்தில் தம்மை முழுமையாக பிரதிநிதித்துவப் படுத்திக் கொள்ளும் பெரும்பான்மை மக்கள், தமது இரண்டு பிரதான கட்சிகள் மூலமும், சிறுபான்மையினருக்கு நம்பிக்கையூட்டும் தீர்வையே வழங்க முன்வர வேண்டும்.—

பெரும்பான்மையினரும் சிறுபான்மையினரும் ஒன்றாக இணைந்து வாழ்வதை நோக்கமாகக் கொண்ட தீர்வு வழங்கப்படவேண்டும். இல்லையேல் இருபகுதியினரும் பிரிந்தே வாழும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள் — என்று அவர் புத்திமதி கூறியிருக்கிறார்.

இலங்கையின் முந்திய வரலாறு, பிரிட்டிஷ்காரர் இந்த நாட்டுக்குச் சுதந்திரம் வழங்கிச் சென்ற பின்னரான அரசியல் குளறுபடிகள், தென்னிலங்கைக் கட்சிகளுக்கு அரசியல் லாபம் தேடும் சரக்காக தமிழர் விவகாரம் மாற்றப்பட்டமை ஆகியவற்றை ஆழ அகலமாகப் படித்து அறிந்தே, பிரிட்டிஷ் தூதுவர் இந்த ஆலோசனையைத் தெரிவித்துள்ளார் எனலாம்.

அத்தோடு, இனப் பிரச்சினையைத் தீர்க்கும் அரசியல் முயற்சிகளுக்குத் தெற்கில் தோன்றியுள்ள எதிர்ப்புகளையும், தடங்கல்களையும் உன்னிப்பாக அவதானித்ததாலும், இன்றைய அரசியல் போக்கை மனம் ஊன்றி நாடி பிடித்ததாலும் இந்த யோசனை அவருக்குப் பிறந்திருக்கலாம்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் கிழக்கிந்திய கம்பனி ஆட்சிகளின் போது சிங்கள, தமிழ் இராசதானிகள் தனித்தனியாகவே இயங்கின. பிரிட்டிஷ் ஆட்சியின் போதே நிர்வாக வசதி கருதி இணைக்கப்பட்டன.

இதனை மனதிற் கொண்டு தமிழர்களின் நம்பிக்கையைப் பெறக் கூடிய, அவர்களது சுயாட்சி உரிமையை வழங்கக் கூடிய, சமத்துவ உரிமையை நிலைநாட்டக் கூடிய ஒருதீர்வே அவசியம் என்பதனை தென்னிலங்கை அரசியல் வாதிகள் இன்னும் உணராதிருப்பது துரதிர்ஷ்டமே!

தமிழர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக்கும் எந்தத் தீர்வும் தமிழர்களின் உண்மையான நம்பிக்கையைப் பெற மாட்டாது. இதனை உணர்ந்து கொண்டால், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது வெகு இலகுவாகி விடும்.

## நெசவு நிலையங்களுக்கு நூல்கள் விநியோகம்

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள அரச நெசவு நிலையங்களுக்கான நெசவு நூல்கள் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டு வருகிறது.

கைதடி மத்தி, மட்டுவில் வேரக்கேணி, மிருசுவில், விடத்தற்பளை ஆகிய இடங்களில் உள்ள நெசவு நிலையங்களை மீண்டும் இயங்க வைப்பதற்காக பிரதேச செயலகம் நூல்களைக் கொள்வனவு செய்து வழங்கியுள்ளது.

இந்த நெசவு நிலையங்கள் மூலம் படுக்கைவிரிப்பு, சேலைகள்போன்ற புடைவைகள் உற்பத்தி செய்யப்படும்.

இந்த நெசவு நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் படுக்கை விரிப்பு, சேலைகள் ஆகியவை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## இரு டாக்டர்கள் மட்டும் கடமைக்குத் திரும்பினர்

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றி விடுமுறையில் சென்ற 5 டாக்டர்களில் இருவர் மீண்டும் கடமைக்குத் திரும்பியுள்ளனர்.

தென் பகுதியிலிருந்து மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு நியமனம் பெற்ற 5 டாக்டர்களும், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரியாக நியமனம் பெற்ற ஒரு டாக்டரும் சுமார் ஒரு மாதகாலம் மட்டுமே கடமையாற்றி விட்டு விடுமுறையில் தங்கள் சொந்த ஊர்களுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

பலவாரகால விடுமுறையின் பின்னர் மந்திகை அரசினர் ஆதாரவைத்தியசாலைக்கு நியமனம் பெற்று வந்திருந்த 5 டாக்டர்களில் இருவர் கடமைக்குத் திரும்பியுள்ளனர். இவர்களில் ஒருவர் பெண் ஆவார். ஏனைய டாக்டர்களும், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டரும் இன்னமும் கடமைக்குத் திரும்பவில்லை.

(ஐ-173)

## ஆசிரியர் தின பொது அறிவு போட்டி

யாழ்ப்பாணம், செப். 28

1997 ஆம் ஆண்டு ஆசிரியர்தின பொது அறிவுப் பரீட்சை ஒக்டோபர் 2 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சை அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும், கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வியிலும் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## கலைப்பீட மாணவர் விரிவுரைகள்

யாழ்ப்பாணம், செப். 28

95 ஆம் ஆண்டு கலைப்பீட மாணவர்களுக்கான விரிவுரைகள் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும் என்றும்—

அன்று காலை 10.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் அவர்களுக்கான அறிமுக விழா நடைபெறும் என்றும்— யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

இதற்கிடையில் —1994/95 கல்வியாண்டுக்கான மருத்துவபீட மாணவர்களின் பரீட்சை முடிவுகள் இன்று வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-5-9)

## காயத்ரீ மகிமை

உலக உயிரினங்கள் உயர்வு பெற அனுதினமும் காலையில் உதித்து மாலையில் மறைபவன் உதயன் எனப்படும் சூரியன். தான் பிரகாசமாக இருப்பதோடு மட்டுமன்றி அனைத்தையும் பிரகாசப் படுத்திக் காட்டுவது பகலவனின் இயல்பு. சூரியனிடமிருந்து நெருப்பைப் பெறுவதும், மின்சாரத்தைப்பெறுவதும் இன்றைய விஞ்ஞான உலகிற்குப் புதிதல்ல.

இவ்வாறு பல பெருமைகள் பெற்ற சூரியனைக் குறித்து புனிதமாக இருந்து ஜெபம் செய்யப்படும் மந்திரமே காயத்ரீ மந்திரம் ஆகும். வேதங்களின் சாரம் எனவும், வேதங்களின் தாய் எனவும் காயத்ரீ மந்திரம் குறிப்பிடப்படுகின்றது. மூன்றுவரிகள் கொண்ட காயத்ரீ மந்திரத்தில் முறையே ஒவ்வொரு வரியும் இருக்கு, யசுர், சாம வேதங்களைக் குறிப்பதாகும். மீண்டும் மீண்டும் ஜெபம் செய்பவர்களைக் காப்பது காயத்ரீ ஆகும்.

ஜெபம் செய்பவர்கள் புனிதமாகவும், ஆசார அனுஷ்டானங்கள் உள்ளவராகவும்இருக்கவேண்டும் என்பது சங்கராசார்யார் சுவாமிகளின் கருத்து. புனிதமான பொருளை புனிதமான இடத்திலேயே வைக்க வேண்டும் அல்லவா?

காயத்ரீ மந்திரம் சூரியனூடாகப் பரம் பொருளின் அருளைப் பெற்றுத் தருகிறது. புத்திக் கூர்மையை அதிகரிக்கச் செய்கிறது, மன அமைதியைத் தருகிறது, சூரியனுடைய தினமாகிய ஞாயிற்றுக் கிழமைகளில் காயத்ரீ ஜெபம் செய்வதுஅதிக பலனைத் தருகிறது.

சூரியன் கண்கண்ட தெய்வமாக உலகம்யாவற்றுக்கும் நன்மை செய்வது போல் காயத்ரீ மந்திரமும் உலகிற்கு நன்மை தரும் பெருமந்திரமாகும்.

சிவஸ்ரீ
தா. மகாதேவக் குருக்கள்

## சின்னத் திரேசம்மாளுக்கு ஆலயம்

குழந்தை இயேசுவின் சின்னத் திரேசம்மாள் விண்ணகமகிமை பெற்ற நூறாவது ஆண்டு இதுவாகும். அவர் பெயரால் யாழ். நகரில்அமைந்துள்ள புனித திரேசம்மாள் ஆலய வளர்ச்சி குறித்த தொகுப்பாகும் இக்கட்டுரை.

இலங்கை மண்ணின் மணிமுடியாக விளங்கும் யாழ்ப்பாண மாநகரிலே, சுண்டுக்குளிப் பகுதியிலே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் புனிதர்களின் ஆலய வரிசையில் புனித சின்னத் திரேசம்மாள் ஆலயமும் ஒன்றாகும்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அந்நிய மதத்தவர்களால் பல கத்தோலிக்க ஆலயங்கள் அழிக்கப்பட்டும் பறிமுதல் செய்யப்பட்டும் வந்த வேளை, இவ்வாறு அழிக்கப்பட்ட ஆலயங்களுள் முதல் சொரூபம் வைக்கப்பட்ட – திவ்வியா தெருவில் இருந்த ஆலயமும் ஒன்றாகும். 1945 ஆம் ஆண்டளவில் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அ. ம. தி. அவர்களால் புனித சின்ன திரேசம்மாளின் சொரூபம் எடுத்து வரப்பட்டு புனித ஜோண் பொஸ்கோ பாலர் பாடசாலையில் வைத்து வழிபாடு செய்யப்பட்டது. இதுவே 1969 காலப்பகுதியில் டொண் பொஸ்கோ ஆலயம் என அழைக்கப்பட்டது.

1974 ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் றக்கா வீதியில் ஆலயம் அமைப்பதற்காக ஒரு காணி வாங்கப்பட்டது. அப்போது அங்கு சிறுகுடில் அமைக்கப்பட்டு வழிபாடுகள் நடைபெற்றன. இக்குடிலானது மாறிமாறி இரு இடங்களில் அமைக்கப்பட்டது.

இச்சுற்றாடலில் வாழும் கிறிஸ்தவர்களுக்கென நிரந்தர ஆலயம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற நேரத்தில் மக்களால் [illegible]டப்பட்ட பெரும் நிதியினைக் கொண்டும், வள்ளல் பெருந்தகைகளின் நன்கொடைகளைக் கொண்டும் ஆலயத்திற்கான அடிக்கல் யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையால் இடப்பட்டு கட்டட வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

1982 ஆம் ஆண்டு மாசி மாதம் 15 ஆம் திகதி சுண்டுக்குளி பங்கு மீண்டும் யாழ். பேராலயப்பங்கிலிருந்து பிரிக்கப்பட்டு தனிப்பங்காக இயங்க அனுமதியளிக்கப்பட்டது. இப்பங்கின் தலைமைப் பங்கு ஆலயமாக புனித யுவானியார் ஆலயமும் அதன்கீழ் புனித திரேசம்மாள் ஆலயமும் ஒரே பங்குத்தந்தையின் கீழ் நிர்வகிக்கப்பட்டன.

1985 ஆம் ஆண்டு மாசி மாதம் பங்குத்தந்தையாக இருந்த பேரருட்திரு. கலாநிதி இராயப்பு யோசவ் ஆண்டகை நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்ட வழிபாடுகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. மூன்று நாள்கள் மட்டும் கொண்டாடப்பட்ட நவநாள் ஆராதனைகள் ஆறு நாள்களாக அதிகரிக்கப்பட்டன; சிறந்த அருட்குரவர்களால் மறையுரைகள் ஆற்றப்பட்டு திருவிழாக்கள் பெருவிழாக்களாக சிறப்புப் பெற்றன. தவக்கால வழிபாடுகள், பக்தி முயற்சிகள் பயபக்தியுடன் நடத்தப்பட்டன. ஞாயிறு, வியாழன் ஆகிய இரு தினங்களில் திருப்பலிகள் நிறைவேற்றப்பட்டன.

ஆலய வளவு துப்புரவு செய்யப்பட்டு நான்கு பக்கங்களிலும் சுற்றுமதில்கள் கட்டப்பட்டு கதவும் போடப்பட்டது. மரியாயின் சேனை, சென். வின்சென் டிபோல் சபை, பாடகர் குழாம் என்பன உருவாக்கப்பட்டன; மறைக்கல்வி வகுப்புக்கள் நடத்தப்பட்டன. இளைஞர், யுவதிகளுக்கான சுற்றுலாக்கள், கரோல் வழிபாடுகள், கிறிஸ்மஸ் தின சிறப்பு விழாவான ஒளிவிழா என்பன ஆரம்பிக்கப்பட்டன. 1993 ஆம் ஆண்டு ஆலயத்தினை மேலும் அழகுபடுத்துகின்ற வகையில் மண்டபமும், முகப்பும் அமைக்கப்பட்டன.

முகப்பின் மேல் தளத்தில் பரிசுத்த ஆவியின் அக்கினி நாவுகளுக்கு நடுவில் கிறிஸ்துவின் சிலுவையும், அதன் கீழ் தாமரைப் பூவும் வரையப்பட்டுள்ளன. ஆண்டவரின் அழைப்பை அறிவிக்கும் தகுந்த மணிக்கோபுரமும் ''அஞ்சாதே! நான் என்றும் உன்னோடு'' என்ற இறைவார்த்தையுடன் அமைக்கப்பட்டது. ஆலயத்தின் உள்ளே அலங்கார வேலைப்பாடுகள், பீட அலங்காரம் என்பன சிறப்பாகச் செய்யப்பட்டு வர்ண அலங்காரமும் மேற்கொள்ளப்பட்டன.

இன்று தந்தையர்களின் வரிசையில் முன்னாள் யாழ். ஆயரின் செயலாளரும், தற்போதைய மறைமாவட்ட குரு முதல்வருமாகிய அருட்திரு. ஜே. பி. ஈ. செல்வராசா அடிகளார் மறைமாவட்ட பணிகளுடன் - பல்வேறு கஷ்டங்கள் மத்தியில் துடிப்பாகச் செயற்பட்டு வருகின்றார்.

சின்னத் திரேசம்மாளின் விண்ணகவாழ்வின் நூற்றாண்டின் நினைவாக ஆலய முன்றலில் அவளின் சொரூபம் வைக்கப்பட்டு குடில் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

— இம்மானுவேல் யோண்சன்

### நாளை

**புரட்டாதி 13**

திங்கட்கிழமை

திதி: திரயோதசி
முன் இரவு 6 21 வரை.
நட்சத்திரம்: மகம்
முற்பகல் 8.41 வரை.
பிரதோஷ விரதம்
சுபநேரம்: 12 02-1 32
ராகுகாலம்: 7.32-9 02
(பகலுக்கும் இரவுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி திகழ்மதி தம்பையா

(இளைப்பாறிய ஆசிரியை)

கட்டுடையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி திகழ்மதி தம்பையா 21 - 09 - 97 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை லண்டனில் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா தம்பையா (ஓய்வு பெற்ற P. W. D. ஓவசியர், சங்கரத்தை) அவர்களின் அன்பு மனைவியும், சிவசுந்தரி (மானிப்பாய்), திருநேசன் (U. K), கல்யாணி (கொழும்பு), இந்திராதேவி (U. K), காலஞ்சென்ற சுகுமாரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேசதாசன் (மானிப்பாய்), மலர் (U. K), குமரேசன் (கொழும்பு), Dr. அழகேசன் (U. K) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுதர்சினி (மானிப்பாய்), பிரியதர்ஷினி (சுவிஸ்), சுமதி (U. K), ஷாமிளா (கொழும்பு), ரமேஷ் (கொழும்பு), செல்வி (U. K), அன்பழகன் (U. K) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27 - 09 - 97ஆம் திகதி U. Kயில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
க. தர்மேசன்
(மருமகன்)

மூளாய்,
சுழிபுரம். (50152)

## அரியகுட்டி நாகரத்தினம் (குகன்)

(உரிமையாளர், குகன் ஸ்ரூடியோ, பருத்தித்துறை)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட அரியகுட்டி நாகரத்தினம் 26 - 09 - 97 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சின்னம்மாவின் (இளைப்பாறிய ஆசிரியை, பருத்தித்துறை சித்தி விநாயகர் பாடசாலை), அன்புக் கணவரும், குகதாசன் (லண்டன்), குகநேசன் (லண்டன்), வனிதா (கனடா), யசோதா (கனடா), குகன் (குகன் ஸ்ரூடியோ, பருத்தித்துறை), ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலபவானி (லண்டன்), உமாதேவி (லண்டன்), ஸ்ரீபவான் (கனடா), ஜெயக்குமார் (கனடா), பகீரதி (பருத்தித்துறை) ஆகியோரின் மாமனாரும், பார்த்திபன் (லண்டன்), லக்சுமி (லண்டன்), தர்சி ((லண்டன்), அகிலன் (லண்டன்), துஷ்யந்தி (கனடா), பிரசன்னா (கனடா), வேணுகா (பருத்தித்துறை), குகரேகா (பருத்தித்துறை), அனுஜா (கனடா), நிவிதா (கனடா) ஆகியோரின் பேரனுமாவார்.

இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
நாகரத்தினம் குகன்
(மகன்)

குகன் ஸ்ரூடியோ,
பருத்தித்துறை.
17, B ரின்சபா றோட்,
கொழும்பு 06. (சி/1650)

## திருமதி கிருபை தம்பிநாயகம்

(இளைப்பாறிய ஆசிரியை, நவாலி)

நவாலியைச் சேர்ந்த திருமதி கிருபை தம்பிநாயகம் 26-09-97 இல் கொழும்பில் காலமானார்.

இவர் அல்பேட் தம்பிநாயகத்தின் (இளைப்பாறிய ஆசிரியர், வைத்தீஸ்வராக் கல்லூரி) அன்பு மனைவியும், வெலிசியா தர்மினி, நிமால் (மொறட்டுவ பல்கலைக்கழகம்), தயாளன், பற்றிக் அகிலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தேவசகாயம் தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற டானியல் அடைக்கலம் (தலைமை ஆசிரியர், ஆசிரியை) அவர்களின் அன்பு மருமகளுமாவார். இவரின் நல்லடக்கம் கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
திருமதி பி. எவ். சின்னத்துரை
(அதிபர், புனித சாள்ஸ் ம. வி.)

இல. 36, அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம். (50165)

## சண்முகம் இராசலிங்கம்

அச்சுவேலி தெற்கு சிவசக்தி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி தெற்கு காளிகோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் இராசலிங்கம் (ஓய்வு பெற்ற கணக்காய்வாளர்) 27-09-97 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கமலலோஜினிதேவியின் (ஆசிரியர், அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை) அன்புக் கணவரும், லோகிதாவின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 28-09-97 ஞாயிற்றுக்கிழமை பகல் 12.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அச்சுவேலி தெற்கு, முழக்கன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கமலலோஜினிதேவி (மனைவி)
(ஆசிரியர், யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை)

காளிகோயிலடி, அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (சி/1653)

# கைதடி முதியோர் இல்லத்தில் ஒரு வார காலம் நிகழ்வுகள்

கொழும்புத்துறை. செப். 28

கைதடிஅரசினர் முதியோர் இல்லத்தில் வாழும் முதியவர்களைத்தொடர்ந்து ஒரு வார காலத்துக்கு கௌரவித்து அவர்களை மகிழ்விக்க கலை நிகழ்வுகளை நடத்தவும் அன்பளிப்புகள் வழங்கவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அவர்களுக்கிடையே கலை மற்றும் விளையாட்டுப் போட்டிகளை நடத்திப் பரிசில்கள் வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஏழாம் திகதிவரை நாளாந்தம் வெவ்வேறு நிகழ்வுகளை நடத்தி அவர்களைக் குதூகலமான சூழலில் வைத்திருக்கவும் ஏற்பாடாகி உள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை காலைதொடக்கம் தொண்டர் ஸ்தாபனப் பிரதிநிதிகள், இப்பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களின் சிரமதானப் பணிகள் நடைபெறும்:

இரண்டாம் திகதி கலை நிகழ்ச்சிகளும், 3 ஆம் திகதி சமயவழிபாடு மற்றும் சமய, சமூக நெறிப்படுத்தல் நிகழ்ச்சிகளும், 4 ஆம் திகதி சிறந்த ஊழியர்கள் மற்றும் முதியோர் தெரிவும், 5 ஆம் திகதி முதியோருக்கான விளையாட்டுகளும், 6 ஆம் திகதி முதியோர் கலை வெளிப்பாடுகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம்.

இறுதி நாளான 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதியோர்களைக் கௌரவித்தலும் பரிசளிப்பும் இடம்பெறும்.

அன்றைய தினம் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் பிரதமவிருந்தினராகக்கலந்து சிறப்பிப்பார். (இ-30)

## 175 பொலீ...

(முதலாம் பக்கத் தொடர்)

களின் 40 க்கும் மேற்பட்ட வீடுகள் எரிக்கப்பட்டதும் தெரிந்ததே.

வாள்கள், துப்பாக்கிகள் சகிதம் வந்தோரால் இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக முழு விசாரணை நடத்தும்படி தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதியைக் கோரி இருந்தது.

கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலீஸ் மா அதிபர் நந்த ஜினசேன, சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் எம். விஜேசிங்க ஆகியோர் இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத் அறிக்கை சமர்ப்பித்ததை அடுத்து இந்த இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டது.

ஊர்காவல்படையைச் சேர்ந்த அலியார் முகம்மது சகாப்தீன் என்பவரும் இச்சம்பவங்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு கல்முனை மாவட்ட நீதிபதி அன்ரன் பாலசிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (இ-5-21)

## புங்குடுதீவில் தேடுதல்

கடந்த புதன்கிழமை குறிகட்டுவானில் உள்ள கடற்படைமுகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தை அடுத்து படையினர் நேற்று புங்குடுதீவில் தேடுதல் நடத்தினர்.

தேடுதலை முடித்துக் கொண்டு படையினர் திரும்பி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

எவராவது கைது செய்யப்பட்டது குறித்து தகவல் எதுவும் இல்லை. (இ)

## பஸ் விபத்தில் இருவர் பலி!

இரணைமடுப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பஸ் விபத்தில் இருவர் கொல்லப்பட்டனர்; 78 பேர் படுகாயமடைந்தனர்.

புதுக்குடியிருப்பில் இருந்து வந்த இந்த பஸ் இரணைமடு அணைக்கட்டுப் பகுதியில் இருந்து சுமார் 40 அடி பள்ளத்தில் வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-164)

## தற்கொலை...

(முதலாம் பக்கத் தொடர்)

திருமலை நகரில் தமிழ்ப்பகுதி ஒன்றில் இவர்கள் தலைமறைவாகி இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சமீப நாள்களில் என்றுமில்லாதவாறு பொலீஸாரும், இராணுவத்தினரும், கடற்படையினரும் நடத்திய சுற்றிவளைப்பு, தேடுதல் காரணமாக திருகோணமலைப் பகுதியில் பதற்றம் நிலவியது.

எனினும் அசம்பாவிதம் எதுவும் இடம்பெற்றதாகத் தகவல் இல்லை.

தற்பொழுது புலிகளுக்கு எதிரான யுத்தம் முக்கிய கட்டத்தை அடைந்து கொண்டிருப்பதாகக் கருதப்படுவதால் புலிகள் முக்கிய நகரங்களில் தாக்குதல்களை நடத்தலாம் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ-5-6)

## மருத்துவபீட...

(முதலாம் பக்கத் தொடர்)

மருத்துவ மாணவர்கள் கோரிக்கை விடுத்திருந்தது தெரிந்ததே.

மாணவர்கள் தரப்புக் கோரிக்கையையும் அதன் நியாயத்தையும் உணர்ந்து கொண்ட பல்கலைக்கழக நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுத்து தீர்வு கண்டதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

சத்திரசிகிச்சை நிபுணர்களான டாக்டர் குணானந்தன், டாக்டர் தயாளன் அம்பலவாணர் ஆகியோர் பேராசிரியர்களாகவும்—

டாக்டர் சண்முகநாதன்மருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளராகவும்—

டாக்டர் மகேஸ்வரன் இடைவரவுப் பேராசிரியராகவும்—

டாக்டர் செல்வி ஏரம்பமூர்த்தி ஆனந்தரூபி நுண்உயிரியியல் விரிவுரையாளராகவும்—

செல்வி குலச்செல்வி ஒட்டுண்ணியியல் விரிவுரையாளராகவும் — நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் ஒக்ரோபர் முதலாம் திகதி காலை 9 மணிக்கு பல்கலைக்கழக சபா மண்டபத்தில் வைத்து வழங்கப்படும்.

நியமிக்கப்பட்ட விரிவுரையாளர்களுக்கும் பேராசிரியர்களுக்குமான வேதனங்கள் அவர்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டது போன்றும்—பல்கலைக்கழக சட்டத்திற்கு அமைவாகவும்-வழங்கப்படும் என்றும் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார். (உ-9)

## 100க்கும்..

(முதலாம் பக்கத் தொடர்)

(மூவர்), நாடகம் அரங்கியல் (மூவர்), சமஸ்கிருதம் (ஒருவர்), புவியியல் (கட்டுரையாசிரியர்ஒருவர்), வரலாறு (கட்டுரையாசிரியர் ஒருவர்), கர்நாடக இசை (போதனாசிரியர் மூவர்). ஆகிய துறைகளுக்கே போதனாசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

விஞ்ஞான பீடம்

விஞ்ஞான பீடத்தில் தாவரவியல்(பன்னிருவர்), விலங்கியல் (எட்டுப் பேர்), கணனி (மூவர்), இரசாயனவியல் (15 பேர்), கணிதம் (9 பேர்), பௌதீகவியல் (ஏழு பேர்) அவர்களது விரிவுரையாளர்கள், கட்டுரையாளர்கள் பதவியில் டிசம்பர் 15 ஆம் திகதி வரை பதவி நீடிப்புச் செய்யப்பட்டுள்ளார்கள்.

விவசாய பீடம்

விவசாய பீடத்தில் — (பயிரியல் மூவர்), விவசாய பொறியியல் (மூவர்), விவசாய உயிரியல் (மூவர்), விலங்கு விஞ்ஞானம் (இருவர்), விவசாய பொருளியல் (இருவர்), விவசாய இரசாயனவியல் (மூவர்), விரிவுரையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களுடன் உடற் கூற்றியல் பேராசிரியராக ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

சித்த வைத்தியத்துறையில் நால்வர் விரிவுரையாளர் நியமனம் பெற்றுள்ளனர்.

இது தவிர—

கிறிஸ்தவம், நாடகமும் அரங்கியலும், சங்கீதம், நடனம், முகாமையியல், வர்த்தகம், பொருளியல் ஆகிய பாடங்களுக்கும் இடை நிலை விரிவுரையாளர்களாகப் பலர் நியமிக்கப்பட்டுள்ளனர். (உ-9)

## சமரவீரவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

தில் மங்கள சமரவீரவிடம் கேட்கப்பட்ட போது, சிங்கள ஆணைக்குழுவின அறிக்கை ஒரு வரலாற்று ஆவணம் அல்ல; அது குப்பைக் கூடைக்குள் போடவேண்டியது என்பதே பெரும்பாலான சிங்கள மக்களின் கருத்தாகும் என்று பதில் அளித்திருந்தார். (இ-6-5)


வாடிக்கையாளர்களுக்கு

ஓர் நற்செய்தி!

நாம் உங்களுக்கு நவநாகரிக புடைவை வகைகளை வழங்க மீண்டும் முன்வந்துள்ளோம்.

★ த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் ★

352, நாவலர் வீதி, — யாழ்ப்பாணம்.
(தற்காலிக முகவரி) (50055)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28 - 09 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org